உகந்ததாக ஆக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஒரு தனி ஸ்டடி டீம் போட்டிருக்கிறார்கள். நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த ஸ்டடி டீம் போடப்பட்டிருக்கிறது. ஆறு மாதம் என்று கால நிர்ணய வரையறை செய்து ரிப்போர்ட் கேட்டிருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டை தருவார்களேயானால், அதன் மேல் மத்திய அரசு பரிசிலனை செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நகரத்தில்தான் அதிகமான கஷ்டம் இருக்கிறது. காலையிலும் மாலையிலும் அதிகமானவர்கள் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். ஆகவே, அந்த நேரங்களில் கண்டக்டர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அந்தக் குறிப்பிட்ட நேரங்களில், நிரந்தரமாகவே, ஒவ்வொரு பஸ்ஸுக்கும் இரண்டு கண்டக்டர்களை போட அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இக்கேள்விக்கும் தொடர்பே இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : It arose out of the reply to the supplementary.

அரிசன நல கூட்டுறவு போக்குவரத்து சங்கம், மதுரை

***341. வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் அரிசன நல கூட்டுறவு போக்குவரத்து சங்கம் அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அச்சங்கத்தின் சார்பில் எத்தனை பேருந்துகள் எங்கெங்கு விடப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : (அ) ஆம்.

(இ) இச்சங்கம், மதுரை மாவட்டத்தில் கீழ்க்காணும் வழித்தடங்களில் இரண்டு பேருந்துகளை இயக்கி வருகிறது.

(1) மதுரையிலிருந்து முதுவார்பட்டி வரை.

(2) மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து திருமங்கலம் வரை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்துச் சங்கம் நல்ல லாபத்தில் நடைபெறுவதாக அறிகிறோம். ஆகவே, இந்தச் சங்கத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இன்னும் பல பஸ் ரூட்கள் இந்தச் சங்கத்திற்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தச் சங்கத்திற்கு மதுரையிலிருந்து கிருஷ்ணன் கோயில் வரை, அதாவது 64 கிலோமீட்டர் தூரம் அளவுக்கு ஒரு பஸ்ஸுக்கு தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சங்கம் இன்னும் பஸ்ஸை கொண்டுவரவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிற போக்குவரத்து பஸ்கள் சரிவர , இயங்குவதில்லை. கொடுக்கப்படுகின்ற பஸ் ரூட்டுகள் விற்கப்படுகின்றன. அரசு இதையெல்லாம் கண்காணிக்க வேண்டும். அன்றுடம் அரசு ஊழியர்கள் கண்காணித்து ஆண்டுமுடித்ததும் வருலைக் கணக்குப் பார்த்து, ஊழியர்களுக்கு லாபத்தை பகிர்ந்து தரப்படக்கூடிய முறையை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது கூட்டுறவு நிர்வாகம் பற்றிய பிரச்னை. பல கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையில் இயங்கி லாபம் அடைகின்றன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்து எந்த நிறுவனம் நஷ்டத்தில் நடக்கிறதோ தெரியவில்லை. முழுத் தகவல் கூட்டுறவுத் துறை அமைச்சரிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

திரு. மா. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, தமிழகத்தில், ஹரிஜன கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் எவ்வளவு இயங்கி வருகின்றன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

மயிலைச் சித்திரக்குளம்.

* 342. வினு—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர், சித்திரக்குளத்தைச் சென்னை மாநகராட்சி குத்தகைக்கு எடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மைலாப்பூர் ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பேயாழ்வார் தேவஸ்தானங்களின் அறங்காவலர்கள் சித்திரக் குளத்தை சென்னை மாநகராட்சிக்கு 14—10—1953 முதல் 99 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒன்றுக்கு குத்தகை விட்டிருக்கிறுர்கள்.

TRUTH ALONE TRIUMPHS